ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2259/54 - 2021 දෙසැම්බර් මස 24 වැනි සිකුරාදා - 2021.12.24
*2259/54 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 123/48* (iv)

**(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டம்**

*(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 19(அ) என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 72 ஆம் பிரிவின்கீழ் இலங்கை மருத்துவப் பேரவையின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கெஹலிய ரம்புக்வல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2021.12.24.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* (1) இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவ (உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைமுறை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) பாராளுமன்றத்தின் அங்கீகாரம்பற்றிய அறிவித்தல் எத்தேதியன்று வர்த்தமானியில் வெளியிடப்படுகின்றதோ அத்தேதியன்று இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

1A - PG 5671 — 510 (2021/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாகம் I
## பெயர்நியமனங்கள்

2. இவ்வொழுங்குவிதிகள்-

(அ) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத் தொழிலர்களினால் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12 (1) (இ) என்னும் பிரிவின்கீழ் எட்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும்

(ஆ) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதும் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான மருத்துவ விசேடநிபுணர்களினால் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12(1) (இஇ) என்னும் பிரிவின்கீழ் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும்;

(இ) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதும் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான பல்மருத்துவ விசேடநிபுணர்களினால மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12(1) (இஇஇ) என்னும் பிரிவின்கீழ் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கும்;

(ஈ) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டோரும் மருத்துவ மற்றும் அறுவை மருத்துவத் தொழிலைப் புரிவதற்கு உரித்துடையோருமான ஆட்களினால் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12(1)(ஈ) என்னும் பிரிவின்கீழ் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கும்; அத்துடன்

(உ) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பல்மருத்துவர்களினால் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12 (1) (உ) என்னும் பிரிவின்கீழ் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கும்,

ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. (1) (இதனகத்துப்பின்னர் “மருத்துவப் பேரவை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை மருத்துவப் பேரவையானது, 2 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காக, தீர்மானத்தின்மூலம், தெரிவத்தாட்சி அலுவலராக மருத்துவப் பேரவையின் தலைவரை அல்லது மருத்துவப் பேரவையின் பதிவாளரை வெளிப்படுத்துதல் வேண்டும்.

(2) இரண்டாம் ஒழுங்குவிதியின் பந்தி (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்பவற்றின்கீழ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர் தனிவேறான தேர்தல்களை நடாத்துதல் வேண்டும்.

4. மருத்துவப் பேரவையானது, அது அவசியமெனக் கருதுமிடத்தும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடாத்தும் நோக்கத்துக்காகவும், அத்தகைய தேர்தலின் முழுமைக்காகவும் அல்லது பாகத்துக்காகவும் அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவின் சம்மதத்துடன் அத்தகைய தேர்தல் ஆணைக்குழுவின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

5. மருத்துவப் பேரவையானது, தேர்தலுக்குமுன்னர், தேர்தல்பற்றிய அறிவித்தல் விடுக்கப்பட்ட நேரத்திலுள்ளவாறு உறுப்பினர்களின் இலத்திரனியல் இடாப்பை நாளதுவரையாக்குதல் வேண்டும்.

6. (1) இரண்டாம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினரின் ஆசனமொன்று மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் நியதிகளின்படி வறிதாக வருமிடத்து, மருத்துவப் பேரவையானது, பேரவையின் அடுத்த கூட்டத்தில், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.

(2) தெரிவத்தாட்சி அலுவலர், மருத்துவப் பேரவையின் அனுமதியின்மேல் வெற்றிடத்தை விளம்பரப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெற்றிடம் தொடர்பில் பெயர்நியமனங்களைக் கோருகின்ற அறிவித்தலை வெளியிடுதலும் வேண்டும்.

(3) பிரிவுகள் 12 (1) (இ), 12 (1) (இஇ), 12 (1) (இஇஇ), 12 (1) (ஈ) மற்றும் 12 (1) (உ) என்பவற்றின் கீழான வெற்றிடமொன்றுக்கான ஒவ்வொரு பெயர்நியமனம் பற்றிய அறிவித்தலும் பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாக முறையே படிவம் அ1, அ2, அ3, அ4அல்லது அ5 இல் இருத்தல் வேண்டும்.

*(4)* (அ) ஏற்பட்ட ஒவ்வொரு வெற்றிடம் தொடர்பிலுமான பெயர்நியமனம் பற்றிய அறிவித்தலொன்று, சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள உள்நாட்டு நாளாந்தச் செய்தித்தாள்களிலும் மருத்துவப் பேரவையின் அலுவலகமுறையான இணையத்தளத்திலும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு பெயர்நியமனம் பற்றிய அறிவித்தலும் பின்வருவனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்:-

(i) பெயர்நியமனம் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதிக்குப்பின்னர் ஏழாவது நாளன்று தொடங்கவேண்டியதும் பெயர்நியமனம் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதிக்குப்பின்னர் இருபத்தோராவது நாளன்று பிற்பகல் 3.00 மணிக்கு முடிவுற வேண்டியதுமான பெயர்நியமனக் காலப்பகுதி;

(ii) இரண்டாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட வெற்றிடத்தின் வகை; அத்துடன்

(iii) பெயர்நியமனத்தைப் பெறுகின்ற இடம்.

7. *(1)* தேர்தலுக்கான ஒவ்வொரு பெயர்நியமனமும் வேட்பாளரினால் நேரடியாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது தெரிவத்தாட்சி அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவப் பேரவையின் அலுவலரொருவருக்கு, வார நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்கும் இடையே இணைப்பிரதிகளில் கையளிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் பெயர்நியமனத்தை முன்மொழிகின்ற ஆட்களும் பெயர்நியமனங்கள் முடிவடையும் நேரத்திலுள்ளவாறு செல்லுபடியான பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(3)* ஒவ்வொரு பெயர்நியமனப்பத்திரமும் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) மருத்துவப் பேரவையின் இயைபான இடாப்பில் காணப்படுகின்றவாறு வேட்பாளரின் முழுப்பெயர்;

(ஆ) பெயர்நியமனங்கள் முடிவடையும் நேரத்தில் செல்லுபடியாகவிருக்கவேண்டிய வேட்பாளரின் பதிவிலக்கம்;

(இ) தேர்தலில் போட்டியிடுவதற்காக,வேட்பாளரின் கைப்பட்ட கையொப்பத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட அவரின் சம்மதம்;

(ஈ) வேட்பாளரினாலான வெளிப்படுத்துகையொன்றும்; அத்தகைய வேட்பாளரைப் பெயர்குறித்து நியமிக்கின்ற ஆட்களுக்கான வெளிப்படுத்துகையொன்றும்; அத்துடன்

(உ) சிங்கள, தமிழ் அல்லது ஆங்கிலமொழிகளில் இருநூற்றைம்பது சொற்களை விஞ்சாத வேட்பாளரின் உயர்தொழில்சார் வாழ்க்கை வரலாற்று விபரம்.

*(4)* ஒவ்வொரு பெயர்நியமனப்பத்திரமும் பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு இயைபான படிவம் ஆ1, ஆ2, ஆ3, ஆ4 அல்லது ஆ5 இல் இருத்தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு வேட்பாளரும் பின்வருமாறு பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12 (1) (இ) என்னும் பிரிவின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒவ்வோர் உறுப்பினரதும் விடயத்தில், மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் செல்லுபடியான பதிவை உடையவர்களான பத்து அல்லது அதற்குமேற்பட்ட மருத்துவத்தொழிலர்களினால் பெயர்குறித்துநியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12(1) (இஇ) என்னும் பிரிவின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒவ்வோர் உறுப்பினரதும் விடயத்தில், மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின் கீழ் செல்லுபடியான பதிவை உடையவர்களான மருத்துவ விசேடநிபுணர்களுள் இருந்து செல்லுபடியான பதிவை உடையவர்களான ஐந்து அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் பெயர்குறித்துநியமிக்கப்படுதல் வேண்டும்;

(இ) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12(1) (இஇஇ) என்னும் பிரிவின்கீழ் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஒவ்வோர் உறுப்பினரதும் விடயத்தில்,மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின் கீழ் செல்லுபடியான பதிவை உடையவர்களான குறிப்பீடுசெய்யப்பட்ட பல்மருத்துவ விசேடநிபுணர்களுள்இருந்து செல்லுபடியான பதிவை உடையவர்களான ஐந்து அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் பெயர்குறித்துநியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12(1) (ஈ) என்னும் பிரிவின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒவ்வோர் உறுப்பினரதும் விடயத்தில், மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் மருத்துவ மற்றும் அறுவைமருத்துவத் தொழில்புரிவதற்கு உரித்துடைய ஆட்களாகச் செல்லுபடியான பதிவை உடையவர்களான ஐந்து அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் பெயர்குறித்துநியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(உ) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 12 (1) (உ) என்னும் பிரிவின்கீழ் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஒவ்வோர் உறுப்பினரதும் விடயத்தில்,மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின்கீழ் செல்லுபடியான பதிவை உடையவர்களான ஐந்து பல்மருத்துவர்களினால் பெயர்குறித்துநியமிக்கப்படுதல் வேண்டும்.

8. தெரிவத்தாட்சி அலுவலர், அவரினாற் பெறப்பட்ட ஒவ்வொரு பெயர்நியமனப்பத்திரத்தினதும் பிரதியொன்றைப்பேரவையின் அறிவித்தற் பலகையிலும் மருத்துவப் பேரவையின் அலுவலகமுறையான இணையத்தளத்திலும் பெயர்நியமனங்கள் முடிவடைகின்ற தேதியன்று பி.ப. 3.00 மணிக்குப்பின்னர் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

9. பெயர்நியமனங்களுக்கெதிரான எவையேனும் ஆட்சேபனைகளும் பெயர்நியமனங்களின் மீளப்பெறுகைகளும், பெயர்நியமனங்கள் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதிக்குப்பின்னர் இருபத்தோராவது நாளன்று பி.ப.3.00 மணியிலிருந்து பெயர்நியமனங்கள் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதிக்குப்பின்னர் இருபத்திநான்காம் நாளன்று பி.ப. 3.00 மணிவரை தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

10. தெரிவத்தாட்சி அலுவலர், பெயர்நியமனம்பற்றிய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை எதிர்கொள்ளாத ஏதேனும் பெயர்நியமனத்தை 7 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டைஅல்லது பின்வரும் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட காரணங்களின் விளைவாக நிராகரித்தல் வேண்டும்:-

(அ) பெயர்நியமனம்பற்றிய அறிவித்தல் விடுக்கப்பட்டதிலிருந்து முற்போந்த ஐந்தாண்டுகளினுள், மருத்துவப் பேரவையின் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் ஒழுக்காற்று நடவடிக்கைமுறை ஒழுங்குவிதிகளின்கீழ் வேட்பாளர் அக்குழுவினால் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளவிடத்து;

(ஆ) மருத்துவப் பேரவையின் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் ஒழுக்காற்று நடவடிக்கைமுறை ஒழுங்குவிதிகளின்கீழ் வேட்பாளர் அக்குழுவினால் குற்றஞ்சாட்டப்பட்டு விதிமுறைப்பட்ட விசாரணை நடாத்தப்பட்டுக் கொண்டிருக்குமிடத்து அல்லது முடிவுறாதிருக்குமிடத்து;

(இ) வேட்பாளர், ஒழுக்காற்று ஏதுக்களின்மீது, அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் பகிரங்க சேவையிலிருந்து பதவி நீக்கப்பட்டுள்ளவிடத்து;

(ஈ) வேட்பாளர் ஒரு குற்றவியல் தவறுக்காக ஒரு சட்ட நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து;

(உ) வேட்பாளர் ஒரு குற்றவியல் தவறுக்காக ஒரு சட்ட நீதிமன்றத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டு தீர்ப்பு வழங்கப்படவுள்ளவிடத்து; அல்லது

(ஊ) பெயர்நியமனம்பற்றிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகாத வேறேதேனும் சந்தர்ப்பத்தில்.

11. தெரிவத்தாட்சி அலுவலரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செல்லுபடியான பெயர்நியமனங்களும், தெரிவத்தாட்சி அலுவலரினால் நிராகரிக்கப்பட்ட பெயர்நியமனங்களும்,வேட்பாளரினால் மீளப்பெறப்பட்ட பெயர்நியமனங்களும் மருத்துவப் பேரவையின் அறிவித்தற் பலகையிலும் மருத்துவப் பேரவையின் அலுவலகமுறையான இணையத்தளத்திலும் வெளிப்படுத்தப்பட்டு வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

12. எவையேனும் பெயர்நியமனப்பத்திரங்கள் தெரிவத்தாட்சி அலுவலரினால் நிராகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அதற்கான காரணங்களைத் தெரிவத்தாட்சி அலுவலர் வேட்பாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். அத்தகைய பெயர்நியமனப்பத்திரத்தை நிராகரிப்பதற்கான தெரிவத்தாட்சி அலுவலரின் முடிபு இறுதியானதும் முற்றானதுமாதல் வேண்டும்.

*13.* ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர்நியமனங்களின் எண்ணிக்கையும் பெயர்நியமனம்பற்றிய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையும் சமமாகவிருக்குமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் தேர்தலைக் கைதுறத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வேட்பாளர்களை ஒவ்வொரு வெற்றிடத்துக்காகவும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களாக வெளிப்படுத்துதலும் வேண்டும்; அத்துடன் மருத்துவப் பேரவையின் அடுத்த கூட்டத்தில் மருத்துவப் பேரவைக்கு அதற்கிணங்க அறிவித்தலும் வேண்டும்.

*14.* (1) செல்லுபடியான பெயர்நியமனங்களின் எண்ணிக்கை, பெயர்நியமனம்பற்றிய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் குறைவாகவிருக்குமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய வேட்பாளர்களை முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களாக வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் மருத்துவப் பேரவையின் அடுத்த கூட்டத்தில் மருத்துவப் பேரவைக்கு அதற்கிணங்க அறிவித்தலும் வேண்டும்.

(2) மருத்துவப் பேரவையானது, இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி எஞ்சியுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

*15.* செல்லுபடியான பெயர்நியமனங்களின் எண்ணிக்கை, பெயர்நியமனம்பற்றிய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை விஞ்சுமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி தேர்தலொன்றை நடாத்துதல் வேண்டும்.

## பாகம் II
## தேர்தல்

*16.* வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேர்தல், தேர்தல்பற்றிய அறிவித்தல் திகதியிலிருந்து மூன்றுமாதக்காலப்பகுதியினுள் நிறைவுசெய்யப்படுதல் வேண்டும்.

*17.* தெரிவத்தாட்சி அலுவலர், சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் உள்ள உள்நாட்டுச் செய்தித்தாளொன்றிலும் மருத்துவப் பேரவையின் அலுவலகமுறையான இணையத்தளத்திலும், தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பெயர்கள், தேர்தல் நடாத்துவதற்கான திகதிகள் மற்றும் அஞ்சல் வாக்காளரொருவராகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பத்தின் முடிவுத்திகதி என்பவற்றைச் சுட்டிக்காட்டி, இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான படிவம் இ இல் தேர்தல்பற்றிய அறிவித்தலை வெளியிடுதல் வேண்டுமென்பதுடன் அதனை மருத்துவப் பேரவையின் அறிவித்தற் பலகையில் வெளிக்காட்டிவைத்தலும் வேண்டும்.

*18.* (1) ஓர் அஞ்சல் வாக்கை அளிப்பதற்கு உரித்துள்ள எவரேனுமாள், பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான படிவம் ஈ இல் ஓர் அஞ்சல் வாக்காளராகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பத்தை அனுப்பலாம்; இது, தேர்தல்பற்றிய அறிவித்தலுடன் சேர்த்து வெளியிடப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பகாரரின் முழுப்பெயர், பதிவிலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பகாரரின் முகவரி என்பவற்றைக் கொண்டுள்ளதும் ஓர் அஞ்சல் வாக்காளராகக் கொள்ளப்படுவதற்கானதுமான முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பம், தேர்தல்பற்றிய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட முடிவுத்திகதிக்குமுன்னர் தெரிவத்தாட்சி அலுவலருக்கு முகவரியிடப்பட்டுப் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) ஓர் அஞ்சல் வாக்காளராகக் கொள்ளப்படுவதற்கான அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் தனிப்பட்டமுறையில் செய்யப்படுதல் வேண்டும்.

*19.* (1) ஓர் அஞ்சல் வாக்காளராகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பம் கிடைக்கப்பெறுவதன்மேல், தெரிவத்தாட்சி அலுவலர் நாள் முத்திரையையிட்டு விபரங்களைச் சரிபார்த்து தனிவேறான இடாப்பொன்றில் விபரங்களைப் பதிதல் அவரது கடமையாதல் வேண்டும்; இந்த இடாப்பு, "அஞ்சல் வாக்காளர்களாகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பகாரர்கள்பற்றிய இடாப்பு" எனக் குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பகாரரின் விபரங்கள் மருத்துவப் பேரவையிலுள்ள இயைபான இடாப்புகளில் அடங்கியுள்ள தகவலுடன் செவ்வைபார்க்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது நிராகரிக்கப்பட்டுள்ளதா, நிராகரிப்பதற்கான காரணங்கள் மற்றும் இயைபான விண்ணப்பகாரருக்கு அஞ்சல் வாக்குச்சீட்டு அனுப்பப்பட்ட திகதி என்பவற்றைச் சுட்டிக்காட்டி அத்தகைய விண்ணப்பம் தொடர்பில் "அஞ்சல் வாக்காளர்களாகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பகாரர்கள்பற்றிய இடாப்பில்" பதிவீடொன்று செய்யப்படுதல் வேண்டும்.

*20. (1)* இயைபான இடாப்பிலிருந்து எவ்வாளின் பெயர் அழிக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் ஒருவர் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாதென்பதுடன் அத்தகைய தகைமையீனம்பற்றி அவருக்கு உடனடியாக அறிவிக்கப்படுதலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஆளின் பெயர், நேரடியாக வாக்களித்தல் தொடங்குவதற்குமுன்னர் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இயைபான இடாப்பில் மீளஇடப்பட்டால், அத்தகைய ஆள் நேரடியாக வாக்களிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

*(2)* மற்றெல்லாச் சந்தர்ப்பங்களிலும், வாக்களிப்பதற்குத் தகவுடைய விண்ணப்பகாரரொருவரின் அஞ்சல் வாக்காளரொருவராகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படுமிடத்து, அத்தகைய விண்ணப்பகாரருக்கு அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்களுடன் உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பகாரர் நேரடியாக வாக்களிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

*(3)* அஞ்சல் வாக்காளர்களாகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பகாரர்களின் நிரல் மற்றும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதாவென்பதைச் சுட்டிக்காட்டி ஒவ்வொரு வாக்காளரினதும் நிலைமை என்பன, தகவுடைய அஞ்சல் வாக்காளர்களுக்கு அஞ்சல் வாக்குச்சீட்டுப்பத்திரங்களை அனுப்புமுன்னர் மருத்துவப் பேரவையின் அலுவலகமுறையான இணையத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*21. (1)* இருபதாம் ஒழுங்குவிதியின் *(3)* ஆம் பந்தியின்கீழான ஒவ்வொரு வாக்குச்சீட்டுப்பத்திரமும், அத்தகைய வாக்குச்சீட்டுப்பத்திரத்தின் பிற்புறத்தில் தெரிவத்தாட்சி அலுவலரினால் கையொப்பமிடப்படுதலும், அலுவலகமுறையான இறப்பர் முத்திரை இடப்படுதலும் வேண்டும்.

*(2)* ஒவ்வோர் அஞ்சல் வாக்குச்சீட்டுப்பத்திரமும் மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட இயைபான முகவரிக்கு விண்ணப்பகாரருக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

*(3)* ஓர் அஞ்சல் வாக்காளராகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பகாரருக்கு வாக்குச்சீட்டுப்பத்திரத்துடன்சேர்த்து பின்வரும் ஆவணங்கள் அனுப்பப்படுதல் வேண்டும்:

(அ) வாக்களிப்பதற்கான அறிவுறுத்தல்கள்;

(ஆ) "அ" எனவடையாளமிடப்பட்டதும் அதன்மீது பின்வருவன அச்சிடப்பட்டதுமான சிறிய கடிதவுறை:-

- (i) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட பதிவுக்கிணங்க அஞ்சல் வாக்காளரின் முழுப்பெயர்;
- (ii) அஞ்சல் வாக்காளரின் பதிவிலக்கம்;
- (iii) தேசிய அடையாள அட்டை இலக்கம்;
- (iv) மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட முகவரி;
- (v) வாக்காளரின் கையொப்பம்; அத்துடன்
- (vi) இரு சாட்சிகளின் பெயர்கள், அவர்களின் பதிவிலக்கங்கள் மற்றும் கையொப்பங்கள்; அத்துடன்

(இ) "அ" எனவடையாளமிடப்பட்ட சிறிய கடிதவுறையில் இடுவதற்காகவும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அஞ்சல் வாக்கை அஞ்சலிலிடுவதற்காகவும் "ஆ" எனவடையாளமிடப்பட்ட பெரிய கடிதவுறை.

*22. (1)* அஞ்சல் வாக்குச்சீட்டுப்பத்திரமானது, வாக்களிப்பதற்குமுன்னர் இரு சாட்சிகளினால் சாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

*(2)* ஓராம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சாட்சிகள், ஒரு மருத்துவத்தொழிலராக, பல்மருத்துவராக, மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் மருத்துவ மற்றும் அறுவைமருத்துவத்தொழில்புரிவதற்கு உரித்துடைய ஆளாக, சட்டத்தரணியாக அல்லது சமாதான நீதிவானாக இருத்தல் வேண்டும்; "அ" எனவடையாளமிடப்பட்ட கடிதவுறையில் அவர்கள் தமது கையொப்பங்களையும் அலுவலகமுறையான முத்திரையையும் இடுதல் வேண்டும்.

*(3)* வாக்களிக்கப்பட்டதன்மேல், வாக்குச்சீட்டுப்பத்திரமானது, "அ" எனவடையாளமிடப்பட்ட சிறிய கடிதவுறையில் வாக்காளரினால் இடப்படுதலும் இலச்சினையிடப்படுதலும் வேண்டுமென்பதுடன், வாக்காளரின் கையொப்பம் 'அ' எனவடையாளமிடப்பட்ட சிறிய கடிதவுறையினது இலச்சினையின்மீது இடப்படுதலும் வேண்டும்.

(4) 'அ' எனவடையாளமிடப்பட்ட சிறிய கடிதவுறையானது,''ஆ'' எனவடையாளமிடப்பட்ட பெரிய கடிதவுறையில் வாக்காளரினால் இடப்படுதலும்,''ஆ'' எனவடையாளமிடப்பட்ட பெரிய கடிதவுறையின்மீது அவரது விபரங்கள் பதியப்படுதலும், இலச்சினையிடப்படுதலும் வேண்டும்.

(5) அஞ்சல் வாக்குச்சீட்டுப்பத்திரங்களைப் பெறுவதற்கான முடிவுத்திகதியன்று அல்லது அதற்குமுன்னர் பெறப்படுவதற்காக, வாக்காளர், 'அ' எனவடையாளமிடப்பட்ட பெரிய கடிதவுறையைத் தெரிவத்தாட்சி அலுவலருக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்புதல் வேண்டும்.

(6) 'அ' எனவடையாளமிடப்பட்ட சிறிய கடிதவுறையில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சீட்டுப்பத்திரங்கள் இருப்பின் அல்லது "ஆ" எனவடையாளமிடப்பட்ட பெரிய கடிதவுறையில் 'அ' எனவடையாளமிடப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட சிறிய கடிதவுறைகள் இருப்பின், அத்தகைய வாக்குச்சீட்டுப்பத்திரங்கள் நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

23. (1) தேர்தல்பற்றிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட முடிவுத்திகதிக்குப்பின்னர் பதிவஞ்சல்மூலம் பெறப்பட்ட அஞ்சல் வாக்குகள் நிராகரிக்கப்படுதல் வேண்டும். அஞ்சல்வாக்கைப் பெறுவதற்கான கடைசி நாளானது, வாரத்தின் வேலைநாளொன்றாகவிருத்தல் வேண்டும்.

(2) 'அ' எனவடையாளமிடப்பட்ட சிறிய கடிதவுறையைக் கொண்டுள்ள "ஆ" எனவடையாளமிடப்பட்ட பெரிய கடிதவுறையானது நாள் முத்திரையிடப்படுதலும், தொடரிலக்கமுறையில் இலக்கமிடப்படுதலும், தெரிவத்தாட்சி அலுவலரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்; அவர் அதன் காப்புக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(3) 'ஆ' எனவடையாளமிடப்பட்ட பெரிய கடிதவுறையின்மீது மருத்துவக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட வாக்காளரின் பெயர், பதிவிலக்கம் மற்றும் வாக்காளரின் முகவரியானது,''அஞ்சல் வாக்காளர்களாகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பகாரர்கள் பற்றிய இடாப்புடன்'' சரிபார்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரினால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) கடிதவுறையின்மீதான விபரங்கள் சரியாகவிருக்குமிடத்து, அக்கடிதவுறையானது அஞ்சல் வாக்குச்சீட்டுப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒவ்வாமையானது தெரிவத்தாட்சி அலுவலரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும்; அஞ்சல் வாக்கை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பது பற்றி அவரது முடிபு இறுதியானதும் முற்றானதுமாதல் வேண்டும்.

24. (1) நேரடியாக வாக்களித்தலானது, மருத்துவப் பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஓரிடத்தில் நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அடுத்தடுத்துவரும் ஒரு செவ்வாய்க்கிழமையன்று மற்றும் புதன்கிழமையன்று நடைபெறுதலும் வேண்டும்.

(2) நேரடியாக வாக்களித்தலானது, ஒவ்வொரு நாளும் மு.ப. 9.00 மணிக்குத் தொடங்குதலும் பி.ப. 4.00 மணிக்கு நிறைவுசெய்யப்படுதலும் வேண்டும்.

(3) நேரடியாக வாக்களிக்கின்ற திகதிகளில் அனுபவம்வாய்ந்த தேர்தற் பணியாட்டொகுதியினர் தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும். அத்தகைய பணியாட்டொகுதியினர் தெரிவத்தாட்சி அலுவலரின் மேற்பார்வைக்கு அமைந்தோராதல் வேண்டும்.

(4) நேரடியாக வாக்களிப்பதற்குத் தகவுடைய ஆட்கள் பற்றிய நிரல்,''நேரடியாக வாக்களிக்கும் வாக்காளர்களின் இடாப்பு எனக் குறிப்பீடுசெய்யப்பட்டு அகரவரிசை ஒழுங்கின்படி தயாரிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் வாக்குகள் அளிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு இது தேர்தற் பணியாட்டொகுதியினருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) வேறெவருக்கும் தென்படாதவகையில் வாக்குச்சீட்டுப்பத்திரத்தை அடையாளமிடுவதற்கான ஓர் ஒழுங்கேற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(6) எவரேனும் வேட்பாளர் அல்லது அவரது முகவர்களுள் ஒருவர், வாக்களிக்கின்ற காலப்பகுதி பூராகவும் வாக்களிப்பை அவதானிப்பதற்கு அனுமதிக்கப்படலாம்.

(7) வாக்களிப்பதற்கு உரித்துடைய ஆளொருவர், அவரது முழுப்பெயரையும், பதிவிலக்கத்தையும் வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அவரது ஆளடையாளத்தைத் தேசிய அடையாள அட்டையின்மூலம் அல்லது மருத்துவப் பேரவை அடையாள அட்டையின்மூலம் அல்லது கடவுச்சீட்டின்மூலம் அல்லது சாரதி உரிமத்தின்மூலம் எண்பித்தலும் வேண்டும்.

(8) எந்தத் துவாரத்தினூடாக வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் வாக்குகள் உட்செலுத்தப்படுகின்றனவோ அந்தத் துவாரம், வாக்களித்தல் நிறைவு செய்யப்பட்டதன்மேல்,குறுக்கே இடப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் மற்றும் வேட்பாளர்களின் அல்லது அவர்களின் முகவர்களின் கையொப்பங்களைக் கொண்டுள்ள காகித நீள்வரித் துண்டொன்றின்மூலம் இலச்சினையிடப்படுதல் வேண்டும்.

25. தேர்தல்களின் நோக்கத்துக்காக, தெரிவத்தாட்சி அலுவலர்,தேர்தல் ஆணைக்குழுவின் உதவியுடனும் மதியுரையுடனும்,மருத்துவப் பேரவையின் பணியாட்டொகுதியினருடன் சேர்த்து மேலதிகமாக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளக்ஷகளையும் நியமித்தல் வேண்டும்.

26. வாக்காளரொருவர்-

(அ) அத்தகைய வாக்காளர் அவரது ஆளடையாளம் பற்றிய எண்பிப்பை வழங்கத்தவறினால் அல்லது மறுத்தால்;

(ஆ) அத்தகைய வாக்காளர் நேரடியாக அல்லது அஞ்சல் மூலம் வாக்களிப்பதன்கீழ் ஏலவே வாக்களித்துள்ளாரென அடையாளங்காணப்பட்டுள்ளவிடத்து; அத்துடன்

(இ) வாக்காளரின் பெயர் இயைபான இடாப்பிலிருந்து அழிக்கப்பட்டுள்ளவிடத்து,

வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

27. (1) நேரடியாக வாக்களிப்பதற்காகவும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுப்பத்திரங்கள் இரு வேறு நிறங்களில் அச்சிடப்படுதல் வேண்டும்.

(2) அஞ்சல் மூலமான வாக்குச்சீட்டுப் பத்திரங்களுக்காகவும் நேரடியாக வாக்களிப்பதற்கான வாக்குச்சீட்டுப் பத்திரங்களுக்காகவும் தனிவேறான இரு பெட்டிகள் இருத்தல் வேண்டும்.

(3) வாக்குச்சீட்டுப்பெட்டிகள் எத்திகதியன்றும் எந்நேரத்திலும் இலச்சினையிடப் படுகின்றனவோ அத்திகதியையும் அந்நேரத்தையும்தெரிவத்தாட்சி அலுவலர் வேட்பாளர்களுக்கு அறிவித்தல் வேண்டும். வேட்பாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுள் ஒருவர் வெற்று வாக்குச்சீட்டுப்பெட்டிகள் இலச்சினையிடப்படுமுன்னர் அவற்றைச் சோதனையிடுவதற்கும் அவர்களின் கையொப்பங்களை இடுவதற்கும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III
## வாக்குகளை எண்ணுதல்

28. (1) பாகம் II இன்கீழ் நடாத்தப்பட்ட ஒரு தேர்தல் தொடர்பில் வாக்குகளை எண்ணுதலானது நேரடியாக வாக்களித்தமை நிறைவு செய்யப்பட்டபின்னர் தொடங்குதல் வேண்டும்.

(2) எண்ணுதலானது, மருத்துவப் பேரவையின் தலைவர், தெரிவத்தாட்சி அலுவலர், வாக்குகளை எண்ணுவதற்கு நியமிக்கப்பட்ட பணியாட்டொகுதியினர் என்போரின் சமுகத்தில் நடைபெறுதல் வேண்டுமென்பதுடன் ஒரு வேட்பாளருக்கு இரு அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் வேண்டுமென்பதுடன் வாக்குகள் எண்ணப்படும் நேரத்தில் சமுகமளிக்கலாம்.

(3) அஞ்சல் மூலமான வாக்குகள் முதலில் எண்ணப்படுதல் வேண்டுமென்பதுடன் அதனையடுத்து நேரடியாக அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படுதலும் வேண்டும். இருபெட்டிகளினுள்ளும் உள்ள வாக்குகளின் எண்ணிக்கை தனிவேறாக எண்ணப்படுதல் வேண்டும். வாக்குச்சீட்டுப்பெட்டியில் இடப்பட்ட எண்ணிக்கைகள் அஞ்சல் மூலமாக வாக்களிக்கப்பட்ட மற்றும் நேரடியாக வாக்களிக்கப்பட்ட எண்ணிக்கைக்குச் சமமாகவிருத்தல் வேண்டும்.

29. (1) தெரிவத்தாட்சி அலுவலர், வாக்குகள் எண்ணப்படுவதனைத் தொடங்குமுன்னர், அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுப் பெட்டிகளின் இலச்சினைகள் உடைக்கப்படாதிருப்பதனை நிச்சயித்தல் வேண்டுமென்பதுடன், அவற்றைப் பணியாட்டொகுதியினரினதும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களினதும் சமுகத்தில் திறத்தலும் வாக்குச்சீட்டுப்பத்திரங்களை வெளியிலெடுத்தலும் வேண்டும்.

(2) அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுப் பெட்டி திறக்கப்படுவதன்மேல், தெரிவத்தாட்சி அலுவலர், வாக்குச்சீட்டுகளைக் கொண்டுள்ள கடிதவுறைகளை எண்ணுதலும் அவற்றின் எண்ணிக்கையைக் குறித்துவைத்தலும் பின்னர் வாக்குச்சீட்டுகளைக்கொண்டுள்ள ஒவ்வொரு கடிதவுறையையும் தனிவேறாகத் திறத்தலும் வேண்டும்.

(3) ''ஆ'' எனவடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டைக் கொண்டுள்ள கடிதவுறையைத் தெரிவத்தாட்சி அலுவலர் திறந்த பின்னர் 'அ' எனவடையாளமிடப்பட்ட சிறிய கடிதவுறை வெளியிலெடுக்கப்படுதலும்,''அஞ்சல் வாக்காளராகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பகார்கள்பற்றிய இடாப்புடன்'' அதன்கண் அடங்கியுள்ள விபரங்கள் சரிபார்க்கப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், அஞ்சல் வாக்கை ஏற்றுக்கொள்ளுதல் மீது அல்லது நிராகரித்தல் மீது தெரிவத்தாட்சி அலுவலரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(5) தெரிவத்தாட்சி அலுவலர், வாக்குச்சீட்டுப்பத்திரங்களை எண்ணும்போதும் அவற்றின் எண்ணிக்கையைப் பதியும்போதும்,வாக்குச்சீட்டுப்பத்திரங்களை மேல்நோக்கியநிலையில் வைத்தல் வேண்டுமென்பதுடன், பத்திரங்களின் பிற்புறத்தில் அச்சிடப்பட்ட இலக்கங்களை எவரேனுமாள் காண்பதனைத் தடுப்பதற்கான தகுந்த எல்லா முற்காப்புகளையும் எடுத்தலும் வேண்டும்.

30. நேரடியாக அளிக்கப்பட்ட வாக்குச்சீட்டுப்பத்திரங்கள் அதேமுறையில் ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பிலும் தனிவேறாக எண்ணப்படுதல் வேண்டும்.

31. ஒரு வாக்குச்சீட்டுப்பத்திரத்திலுள்ள அடையாளம் தெளிவற்றதாகவிருப்பின், வாக்கை நிராகரிப்பதா அல்லது ஏற்றுக்கொள்வதா என்பது தெரிவத்தாட்சி அலுவலரினால் முடிபு செய்யப்படுதல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் நிராகரிக்கப்பட்ட ஒவ்வொரு வாக்கின்மீதும் 'நிராகரிக்கப்பட்டது' எனவடையாளமிடுதல் வேண்டுமென்பதுடன் நிராகரிக்கப்பட்ட மொத்த வாக்குகள் தனிவேறாகப் பதியப்படுதலும் வேண்டும்.

32. மொத்தச் செல்லுபடியான வாக்குகளும் ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையும் தனிவேறாக எண்ணப்படுதல் வேண்டும். அதியுச்ச எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெற்றுள்ள வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்; அதன் பின்னர் அடுத்த அதியுச்ச வாக்குகளைப் பெற்றவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய எல்லா உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்படும்வரை அவ்வாறு தொடர்ந்து செய்தல் வேண்டும்.

33. (1) எண்ணுதல் பூர்த்திசெய்யப்படும் அத்தகைய நேரம்வரை எண்ணுதல் தொடர்ந்து நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒரு வேட்பாளரினால் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட முகவரினால் மீள்எண்ணுகையொன்று கோரப்படுமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் அவசியம்பற்றி முடிபுசெய்தல் வேண்டும்.

(3) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களும் அவர்களினாற் பெறப்பட்ட வாக்குகளும் மருத்துவப் பேரவைக்கு அதன் அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் IV
## பொது ஏற்பாடுகள்

34. மருத்துவப்பேரவையானது,தேர்தலை மேற்பார்வைசெய்து கண்காணிப்பதற்காக அனுபவம்வாய்ந்த தேர்தற் பணியாட்டொகுதியினரும் பாரபட்சமற்ற அலுவலர்களும் தொழிலுக்கமர்த்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

35. தேர்தல் நடைமுறையில் வெளிப்படையான தன்மையைப் பேணுதல் தெரிவத்தாட்சி அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

36. (1) தேர்தலை நடாத்துதல், வாக்குகளை எண்ணுதல் அல்லது முடிவுகளை அறிவித்தல் தொடக்ஷபான எவையேனும் முறைப்பாடுகள் அதேநாளன்று தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலர் பிரச்சினைகளைத் தாமதமின்றித் தீக்ஷத்துவைத்தலும் வேண்டும்.

(2) தெரிவத்தாட்சி அலுவலர், தீர்த்துவைக்கப்படாத ஏதேனும் கருமத்தை மருத்துவப் பேரவையின் கவனத்துக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

37. தேர்தல் தொடர்பாக இயைபான எல்லா ஆவணங்களும் தெரிவத்தாட்சி அலுவலரின் காப்பான கட்டுக்காப்பின்கீழ் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

38. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 68 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

**அட்டவணை**

பெயர்நியமனங்கள்பற்றிய அறிவித்தல் [ஒழுங்குவிதி 6(3)]

படிவம் 'அ1'

இலங்கை மருத்துவப் பேரவை

பிரிவு 12 (1) (இ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

(மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத் தொழிலர்கள்)

மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 12 (1) (இ) என்பதன்கீழ் பேரவைக்கு எட்டு (08) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பெயர்நியமனங்கள் பெறப்படும். அத்தகைய ஆள் தற்போது செல்லுபடியான பதிவைக் கொண்டவரும் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டவருமான மருத்துவத்தொழிலர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.

பெயர்நியமனப்பத்திரத்தின் படிவம், www.srilankamedicalcouncil.org என்ற மருத்துவப் பேரவை இணையத்தளத்திலிருந்து கீழிறக்கப்படலாம். ஒவ்வொரு பெயர்நியமனப்பத்திரமும்,தேர்தலை நாடுகின்ற ஆளின்முழுப்பெயரையும், பதிவிலக்கத்தையும் சம்மதத்தையும் சுட்டிக்காட்டி, மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் செல்லுபடியான பதிவுடனான பத்து (10) அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். கையொப்பங்கள், மருத்துவப் பேரவையில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள ஆவணங்களுடன் சரிபார்க்கப்படும். பதிவின் செல்லுபடியானதன்மை, அறிவித்தலின் முடிவுத்திகதியன்றுள்ளவாறு சரிபார்க்கப்படும்.

இணைப்பிரதிகளிலான பெயர்நியமனப்பத்திரங்கள் கீழே குறித்துரைக்கப்பட்ட பெயர்நியமனக் காலப்பகுதியின்போது, கொழும்பு 10, நொரிஸ் கனால் வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை மருத்துவப் பேரவையின் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.

..........................ஆந் திகதியிலிருந்து.............................ஆந் திகதிவரை

பெயர்நியமனங்கள், வேலைநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தலொன்று அவசியமாயின், மேலதிக அறிவித்தலொன்று வழங்கப்படும்.

தெரிவத்தாட்சி அலுவலர்

இலங்கை மருத்துவப் பேரவை.

படிவம் 'அ2'

இலங்கை மருத்துவப் பேரவை

*பிரிவு 12 (1) (இஇ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்*

*(மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத் விசேடநிபுணர்கள்)*

*மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 12 (1) (இஇ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கு மூன்று (03) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பெயர்நியமனங்கள் பெறப்படும். அத்தகைய ஆட்கள், தற்போது செல்லுபடியான பதிவுடன் மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விசேடநிபுணர்களாக இருத்தல் வேண்டும்.*

*பெயர் நியமனப்பத்திரத்தின் படிவம்,* www.srilankamedicalcouncil.org *என்ற மருத்துவப் பேரவை இணையத்தளத்திலிருந்து கீழிறக்கப்படலாம். ஒவ்வொரு பெயர்நியமனப்பத்திரமும், தேர்தலை நாடுகின்ற ஆளின் முழுப்பெயரையும், பதிவிலக்கத்தையும், சம்மதத்தையும் சுட்டிக்காட்டி, மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின்கீழ் செல்லுபடியான பதிவுடனான ஐந்து (5) அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். கையொப்பங்கள், மருத்துவப் பேரவையில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள ஆவணங்களுடன் சரிபார்க்கப்படும். பதிவின் செல்லுபடியானதன்மை, அறிவித்தலின் முடிவுத் திகதியன்றுள்ளவாறு சரிபார்க்கப்படும்.*

*இணைப்பிரதிகளிலான பெயர்நியமனப்பத்திரங்கள் கீழே குறித்துரைக்கப்பட்ட பெயர்நியமனக் காலப்பகுதியின்போது, கொழும்பு 10, நொரிஸ் கனால் வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை மருத்துவப் பேரவையின் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.*

.......................................*ஆந் திகதியிலிருந்து*..............................*ஆந் திகதிவரை*

*பெயர்நியமனங்கள், வேலைநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*தேர்தலொன்று அவசியமாயின், மேலதிக அறிவித்தலொன்று வழங்கப்படும்.*

*தெரிவித்தாட்சி அலுவலர்*
*இலங்கை மருத்துவப் பேரவை.*

படிவம் 'அ3'

இலங்கை மருத்துவப் பேரவை

*பிரிவு 12 (1) (இஇஇ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல்*

*(மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பல்மருத்துவ விசேடநிபுணர்கள்*

*மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 12 (1) (இஇஇ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கு ஓர் (01) உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பெயர்நியமனங்கள் பெறப்படும். அத்தகைய ஆள் தற்போது செல்லுபடியான பதிவைக் கொண்டவரும் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டவர்களுமான பல்மருத்துவ விசேடநிபுணர்களாக இருத்தல் வேண்டும்.*

*பெயர்நியமனப்பத்திரத்தின் படிவம்,* www.srilankamedicalcouncil.org *என்ற மருத்துவப் பேரவை இணையத்தளத்திலிருந்து கீழிறக்கப்படலாம். ஒவ்வொரு பெயர்நியமனப்பத்திரமும், தேர்தலை நாடுகின்ற ஆளின் முழுப்பெயரையும், பதிவிலக்கத்தையும், சம்மதத்தையும் சுட்டிக்காட்டி, மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின்கீழ் செல்லுபடியான பதிவுடனான ஐந்து (5) அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். கையொப்பங்கள், மருத்துவப் பேரவையில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள ஆவணங்களுடன் சரிபார்க்கப்படும். பதிவின் செல்லுபடியானதன்மை, அறிவித்தலின் முடிவுத்திகதியன்றுள்ளவாறு சரிபார்க்கப்படும்.*

*இணைப்பிரதிகளிலான பெயர்நியமனப்பத்திரங்கள் கீழே குறித்துரைக்கப்பட்ட பெயர்நியமனக் காலப்பகுதியின்போது, கொழும்பு 10, நொரிஸ் கனால் வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை மருத்துவப் பேரவையின் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.*

*.......................................ஆந் திகதியிலிருந்து..............................ஆந் திகதிவரை*

*பெயர்நியமனங்கள், வேலைநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*தேர்தலொன்று அவசியமாயின், மேலதிக அறிவித்தலொன்று வழங்கப்படும்.*

*தெரிவத்தாட்சி அலுவலர்*
*இலங்கை மருத்துவப் பேரவை.*

படிவம் '*அ4*'

இலங்கை மருத்துவப் பேரவை

*பிரிவு 12 (1) (ஈ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல்*

*(மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ மற்றும் அறுவை மருத்துவத் தொழில்புரிவதற்கு உரித்துடையோரான ஆட்கள்)*

*மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 12 (1) (ஈ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கு ஓர் (01) உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பெயர்நியமனங்கள் பெறப்படும். அத்தகைய ஆள் தற்போது செல்லுபடியான பதிவைக் கொண்டவரும் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டவரும்மருத்துவ மற்றும் அறுவை மருத்துவத் தொழில்புரிவதற்கு உரித்துடையவருமான ஆள் ஒருவராகவிருத்தல் வேண்டும்.*

*பெயர்நியமனப்பத்திரத்தின் படிவம்,* www.srilankamedicalcouncil.org *என்ற மருத்துவப் பேரவை இணையத்தளத்திலிருந்து கீழிறக்கப்படலாம். ஒவ்வொரு பெயர்நியமனப்பத்திரமும், தேர்தலை நாடுகின்ற ஆளின்முழுப்பெயரையும், பதிவிலக்கத்தையும், சம்மதத்தையும் சுட்டிக்காட்டி, மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் செல்லுபடியான பதிவுடனான ஐந்து (5) அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். கையொப்பங்கள், மருத்துவப் பேரவையில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள ஆவணங்களுடன் சரிபார்க்கப்படும். பதிவின் செல்லுபடியானதன்மை, அறிவித்தலின் முடிவுத்திகதியன்றுள்ளவாறு சரிபார்க்கப்படும்.*

*இணைப்பிரதிகளிலான பெயர்நியமனப்பத்திரங்கள் கீழே குறித்துரைக்கப்பட்ட பெயர்நியமனக் காலப்பகுதியின் போது, கொழும்பு 10, நொரிஸ் கனால் வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை மருத்துவப் பேரவையின் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.*

*........................................ஆந் திகதியிலிருந்து..............................ஆந் திகதிவரை*

*பெயர்நியமனங்கள், வேலைநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*தேர்தலொன்று அவசியமாயின், மேலதிக அறிவித்தலொன்று வழங்கப்படும்.*

*தெரிவத்தாட்சி அலுவலர்*
*இலங்கை மருத்துவப் பேரவை.*

படிவம் 'அ5'

இலங்கை மருத்துவப் பேரவை

*பிரிவு 12 (1) (உ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல்*

*(மருத்துவக் கட்டளை ச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பல்மருத்துவக்ஷுகள்)*

*மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 12 (1) (உ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கு ஓர் (01) உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பெயர்நியமனங்கள் பெறப்படும். அத்தகைய ஆள் தற்போது செல்லுபடியான பதிவைக் கொண்டவரும் மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டவருமான மருத்துவத்தொழிலர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.*

*பெயர்நியமனப்பத்திரத்தின் படிவம்,* www.srilankamedicalcouncil.org *என்ற மருத்துவப் பேரவை இணையத்தளத்திலிருந்து கீழிறக்கப்படலாம். ஒவ்வொரு பெயர்நியமனப்பத்திரமும், தேர்தலை நாடுகின்ற ஆளின்முழுப்பெயரையும், பதிவிலக்கத்தையும், சம்மதத்தையும் சுட்டிக்காட்டி, மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின்கீழ் செல்லுபடியான பதிவுடனான ஐந்து (5) அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். கையொப்பங்கள், மருத்துவப் பேரவையில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள ஆவணங்களுடன் சரிபார்க்கப்படும். பதிவின் செல்லுபடியானதன்மை, அறிவித்தலின் முடிவுத்திகதியன்றுள்ளவாறு சரிபார்க்கப்படும்.*

*இணைப்பிரதிகளிலான பெயர்நியமனப்பத்திரங்கள் கீழே குறித்துரைக்கப்பட்ட பெயர்நியமனக் காலப்பகுதியின்போது, கொழும்பு 10, நொரிஸ் கனால் வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை மருத்துவப் பேரவையின் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.*

*....................................... ஆந் திகதியிலிருந்து .............................. ஆந் திகதிவரை*

*பெயர்நியமனங்கள், வேலைநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*தேர்தலொன்று அவசியமாயின், மேலதிக அறிவித்தலொன்று வழங்கப்படும்.*

*தெரிவத்தாட்சி அலுவலர்*
*இலங்கை மருத்துவப் பேரவை.*

பெயர்நியமனப்பத்திரங்கள்

[ஒழுங்குவிதி 7(4)]

படிவம் 'ஆ 1'

இலங்கை மருத்துவப் பேரவை (இமபே)

பிரிவு 12 (1) (இ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

(மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத்தொழிலர்கள்)

முழுப்பெயர் : ...........................................................................................

இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. : ..................................................

தே.அ.அ : ............................................................

பால் : ............................................................

இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட வேட்பாளரின் முகவரி : ............................................................

தொழிலிடம் : ............................................................

தொடர்புகொள்ளும் இல. : ............................................................

மின்னஞ்சல் : ............................................................

............................................................ ஆகிய நான், இலங்கை மருத்துவப் பேரவைக்கான உறுப்பினர்களின் தேர்தலுக்காகப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு இத்தால் சம்மதமளிக்கின்றேன்.

கையொப்பம் : ............................................................ திகதி : ............................................................

மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 12 (1) (இ) என்பதன்கீழ் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இலங்கை மருத்துவப் பேரவையின் ........................ ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட வைத்தியக் கலாநிதி ...................................................... அவர்களை (முழுப்பெயர்) இத்தால் பெயர்குறித்து நியமிக்கின்றோம்.

வெளிப்படுத்தியவர்கள்

| | பெயர் | இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட முகவரி | இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. | கையொப்பம் | திகதி |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |
| 6 | | | | | |
| 7 | | | | | |
| 8 | | | | | |
| 9 | | | | | |
| 10 | | | | | |

படிவம் 'ஆ2'

இலங்கை மருத்துவப் பேரவை (இமபே)

பிரிவு 12 (1) (இஇ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

(மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ விசேடநிபுணர்கள்)

முழுப்பெயர் : ..........................................................................................

இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. : ..........................................................................................

தே.அ.அ : ..........................................................................................

பால் : ..........................................................................................

இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட வேட்பாளரின் முகவரி : ..........................................................................

தொழிலிடம் : ..........................................................................................

தொடர்புகொள்ளும் இல. : ..........................................................................................

மின்னஞ்சல் : ..........................................................................................

.......................................................................................... ஆகிய நான், இலங்கை மருத்துவப் பேரவையின் தேர்தலுக்காகப் பெயர்குறித்துநியமிக்கப்படுவதற்கு இத்தால் சம்மதமளிக்கின்றேன்.

கையொப்பம் : .......................................................................................... திகதி : ........................................

மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 12 (1) (இஇ) என்பதன்கீழ் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இலங்கை மருத்துவப் பேரவையின் ..........................................ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட வைத்தியக் கலாநிதி .................................... அவர்களை (முழுப்பெயர்) இத்தால் பெயர்குறித்துநியமிக்கின்றோம்.

வெளிப்படுத்தியவர்கள்

| | பெயர் | இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட முகவரி | இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. | கையொப்பம் | திகதி |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

படிவம் 'ஆ3'

இலங்கை மருத்துவப் பேரவை (இமபே)

*பிரிவு 12 (1) (இஇஇ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல்*

*(மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பல்மருத்துவ விசேடநிபுணர்கள்)*

முழுப்பெயர் : ..............................................................................................
இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. : ..............................................................................................
தே.அ.அ : ..............................................................................................
பால் : ..............................................................................................
இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட வேட்பாளரின் முகவரி : ..............................................................................
தொழிலிடம் : ..............................................................................................
தொடர்புகொள்ளும் இல. : ..............................................................................................
மின்னஞ்சல் : ..............................................................................................

.............................................................................................. ஆகிய நான், இலங்கை மருத்துவப் பேரவையின் தேர்தலுக்காகப் பெயர்குறித்துநியமிக்கப்படுவதற்கு இத்தால் சம்மதமளிக்கின்றேன்.

கையொப்பம் : ......................................................... திகதி : ........................................

மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 12 (1) (இஇஇ) என்பதன்கீழ் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இலங்கை மருத்துவப் பேரவையின் ........................................ ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட வைத்தியக் கலாநிதி ................................... அவர்களை (முழுப்பெயர்) இத்தால் பெயர்குறித்துநியமிக்கின்றோம்.

வெளிப்படுத்தியவர்கள்

| | பெயர் | இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட முகவரி | இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. | கையொப்பம் | திகதி |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

படிவம் ‘ஆ4’

இலங்கை மருத்துவப் பேரவை (இமபே)

*பிரிவு 12 (1) (ஈ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல்*

*(மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ மற்றும் அறுவை மருத்துவத் தொழில்புரிவதற்கு உரித்துடையோரான ஆட்கள்)*

முழுப்பெயர் : ..........................................................................................
இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. : ..........................................................................................
தே. அ. அ : ..........................................................................................
பால் : ..........................................................................................
இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட வேட்பாளரின் முகவரி : ....................................................................
தொழிலிடம் : ..........................................................................................
தொடர்புகொள்ளும் இல. : ..........................................................................................
மின்னஞ்சல் : ..........................................................................................

.......................................................................................... ஆகிய நான், இலங்கை மருத்துவப் பேரவையின் தேர்தலுக்காகப் பெயர்குறித்துநியமிக்கப்படுவதற்கு இத்தால் சம்மதமளிக்கின்றேன்.

கையொப்பம் : ................................................ திகதி : ...........................................

மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 12 (1) (ஈ) என்பதன்கீழ் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இலங்கை மருத்துவப் பேரவையின் ......................................................... ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட வைத்தியக் கலாநிதி .............. ........................... அவர்களை (முழுப்பெயர்) இத்தால் பெயர்குறித்துநியமிக்கின்றோம்.

வெளிப்படுத்தியவர்கள்

| | பெயர் | இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட முகவரி | இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. | கையொப்பம் | திகதி |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

படிவம் 'ஆ5'

இலங்கை மருத்துவப் பேரவை (இம்பே)

*பிரிவு 12 (1) (உ) என்பதன்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல்*

*(மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத்தொழிலர்கள்)*

முழுப்பெயர் : ..................................................................
இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. : ..................................................................
தே.அ.அ : ..................................................................
பால் : ..................................................................
இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட வேட்பாளரின் முகவரி : ..................................................................
தொழிலிடம் : ..................................................................
தொடக்ஷபுகொள்ளும் இல. : ..................................................................
மின்னஞ்சல் : ..................................................................

................................................................. ஆகிய நான், இலங்கை மருத்துவப் பேரவையின் தேக்ஷதலுக்காகப் பெயர் குறித்துநியமிக்கப்படுவதற்கு இத்தால் சம்மதமளிக்கின்றேன்.

கையொப்பம் : .................................................................. திகதி : ..................................................................

மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 12 (1) (உ) என்பதன்கீழ் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இலங்கை மருத்துவப் பேரவையின் ....................... ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட வைத்தியக் கலாநிதி ......................... அவர்களை (முழுப்பெயர்) இத்தால் பெயர்குறித்துநியமிக்கின்றோம்.

வெளிப்படுத்தியவர்கள்

| | பெயர் | இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட முகவரி | இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவில. | கையொப்பம் | திகதி |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

தேர்தல் பற்றிய அறிவித்தல்

[ஒழுங்குவிதி 17]

படிவம் 'இ'

இலங்கை மருத்துவப் பேரவை (இமபே)

மருத்துவப் பேரவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் ................ ஆம் பிரிவின்கீழ் மருத்துவப் பேரவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பெயர்நியமனங்கள் பெறப்பட்டன. பின்வருவோர் முறையாகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டனர்.

..................................................................
..................................................................
..................................................................

வாக்களிப்பதற்குத் தகவுடையோராகவுள்ள மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் ............ ஆம் பிரிவின்கீழ் செல்லுபடியான பதிவைக்கொண்ட .......................................... உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தேர்தலொன்று நடாத்தப்படுதல் வேண்டும்; இது, ஒன்றில் அஞ்சல்மூலம் அல்லது நேரடியாகச் செய்யப்படலாம்.

அஞ்சல்மூலமான வாக்குக்கான கோரிக்கை எழுத்திலும் தனிப்பட்ட முறையிலும் கோரப்படுதல் வேண்டும். இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட முழுப்பெயர், இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவிலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரரின் வதிவிட முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கடிதமொன்று முகவரியிட்டனுப்பப்படுதல் வேண்டும். இதனோடு இணைக்கப்பட்ட படிவம் 'ஈ' இல் அஞ்சல் வாக்குக்கான விண்ணப்பம் பதிவஞ்சல்மூலம் மட்டுமே தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது. ஓர் அஞ்சல் வாக்குக்கான விண்ணப்பத்தின் முடிவுத்திகதி .......................................... ஆந்திகதியன்று பி.ப. 3.00 மணியாதல் வேண்டும்.

அளிக்கப்பட்ட அஞ்சல்மூலமான வாக்குகள் .......................................... ஆந்திகதியன்று பி.ப. 3.00 மணிக்கு முன்னர் மருத்துவப் பேரவை அலுவலகத்தை வந்தடைதல் வேண்டும்.

அஞ்சல்மூலமான வாக்கொன்றுக்கு விண்ணப்பித்திராதவர்களுக்காக நேரடியான வாக்களித்தலானது, இலங்கை மருத்துவப் பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஓரிடத்தில் செவ்வாய்க்கிழமையான .......................................... ஆந்திகதியன்றும் புதன்கிழமையான .......................................... ஆந்திகதியன்றும் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை இடம்பெறுதல் வேண்டும்.

தெரிவத்தாட்சி அலுவலர்
இலங்கை மருத்துவப் பேரவை

ஓர் அஞ்சல் வாக்காளராகக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பம்

[ஒழுங்குவிதி *18(1)*]

படிவம் 'ஈ'

இலங்கை மருத்துவப் பேரவை (இமபே)

மருத்துவப் பேரவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

பின்வருபவருக்கு முகவரியிடப்பட்டு பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்:

தெரிவத்தாட்சி அலுவலர்,
இலங்கை மருத்துவப் பேரவை,
இல. 31, நொரிஸ் கனால் வீதி, கொழும்பு 10.

அஞ்சல்மூலமான வாக்குகளுக்கான விண்ணப்பங்கள் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது
முழுப்பெயர்: ....................................................
இலங்கை மருத்துவப் பேரவைப் பதிவிலக்கம்: ....................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம்: ....................................................
இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட முகவரி: ....................................................
தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம்: ............................. செல்லிடத் தொலைபேசி இலக்கம் ....................................................
மின்னஞ்சல் முகவரி: ....................................................
தொழில்புரிகின்ற மருத்துவமனையின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : ....................................................

தெரிவத்தாட்சி அலுவலர்
மருத்துவப் பேரவை உறுப்பினர்களின் தேர்தல் - 20% ..........................................

அன்புள்ள ஐயா /அம்மணி
மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் ........................... ஆம் பிரிவின்கீழ் மருத்துவப் பேரவைக்கு உறுப்பினர்ளைத் தேர்ந்தெடுப்பதர்கான தேர்தல்

மேற்படி தேர்தலில் அஞ்சல் வாக்காளரொருவராக எனது வாக்கையளிப்பதற்கு விரும்புகின்றேன்.இலங்கை மருத்துவப் பேரவையிடம் பதிவுசெய்யப்பட்ட எனது வதிவிட முகவரிக்கு வாக்குச்சீட்டுப்பத்திரமொன்றை அனுப்பிவைக்கவும். இலங்கை மருத்துவப் பேரவைக்கு உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பான எல்லா விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் நான் அமைந்தொழுகுவேன்.

திகதி: .................................................... விண்ணப்பகாரரின் கையொப்பம்: ....................................................

அலுவலகப் பாவனைக்காக மட்டும்

விண்ணப்பம் பெறப்பட்ட திகதி :
தொடரில :
நிலைமை : ஏற்றுக்கொள்ளப்பட்டது /நிராகரிக்கப்பட்டது :
தெரிவத்தாட்சி அலுவலரின் கையொப்பம் :

EOG 12- 0275

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.